# தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

# தேனி மாவட்டம்

தேனி மாவட்டம் பல்வேறு வகையான தோட்டப்பயிர்கள் சாகுபடி செய்ய உகந்த மண்வகைப்படும், தட்ப வெப்பமும் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தில் சுமார் 52650 எக்டர்கள் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களான மா, வாழை, திராட்சை, கொட்டை முந்தரி, முருங்கை, தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம், மிளாகாய், மிளகு, ஏலம், காப்பி, தேயிலை, மல்லிகை, ரோஜா போன்ற அனைத்து வகையான தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. உழவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் நோக்கில் தோட்டக்கலைப்பயிர்களின் உற்பத்தி திறனை மேம்படுத்தி மகசூலையும், உழவர்தம் வருவாயையும் பெருக்கும் நோக்கத்துடன் அரசு பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உழவர் பெருமக்கள் மானிய உதவியோடு நவீன சாகுபடி தொழில்நுட்பங்களையும் அறிந்துகொண்டு அவற்றை முறையாக பயன்படுத்தி அதிக மகசூலும் பெற்று வருகிறார்கள்.

## தோட்டக்கலைத்றையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பாரதப்பிரதமரின் விவசாய - கஞக்கான நுண்ணீர் பாசன திட்டம் (PMKSY)

இன்றைய காலக்கட்டத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான அளவு பாசன நீர் கிடைப்பதில்லை. அதனால் கிடைக்கும் சிறிதளவு நீரைக்கொண்டு அதனை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்திட அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே நுண்ணீர் பாசன திட்டமாகும். சொட்டுநீர், தெளிப்பு நீர் என நுண்ணீர்பாசன முறைகள் பலவற்றுக்கும் அரசு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் அளித்து உழவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய ஊக்கப்படுத்தி வருகிறது. குறிப்பாக இத்திட்டதில் ஆதிதிராவிட, பழங்குடி விவசாயிகள் மற்றும் மகளிர்கள் பயனடைய அதிக முக்கியத்துவம் அளித்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தேசிய தோட்டக்கலை இயக்கம்(MIDH-National Horticulture Mission)

தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியின் மூலம் விவசாயிகளின் வருவாயை உயர்த்திடும் குறிக்கோளுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இது மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர்கள் பரப்பு விரிவாக்கம் செய்திட 40-50 சதவீத மானியம் பழங்கள், வீரிய காய்கறிகள், மலர்கள், நறுமணப் பயிர்கள் சாகுபடி செய்திட வழங்கப்படுகிறது.நவீன சாகுபடி தொழில்நுட்பமான பசுமைக்குடில் அமைக்க 50 சத மானியமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.467.50-ம், நிழல்வலைக்கூடம் அமைத்திட ஒரு சதுர மீட்டருக்கு ரூ.355-ம் மற்றும் நிலப்போர்வை அமைக்க ஒரு எக்டருக்கு ரூ.16000-ம் மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய சாகுபடி முறைகளை உழவர்கள் மேற்கொண்டு தரமான, அதே நேரம் அனைத்து பருவங்களிலும் அனைத்து காய்கறிகள் மற்றும் மலர்களை உற்பத்தி செய்திட மானிய உதவியுடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தோட்டக்கலை பயிர்களில் உற்பத்தி திறனை உயர்த்திட, அயல் மகரந்த சேர்க்கையை ஊக்கப்படுத்த, தேனீ வளர்ப்பு உபகரணங்களையும், தோட்டக்கலையில் டிராக்டர், பவர்டில்லர் ஆகிய இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு மானியமும் அளிக்கப்படுகிறது. உழவர்கள் நவீன தோட்டக்கலை உத்திகளை அறிந்து கொள்ளவும் அவற்றை கடைப்பிடிக்கவும் பயிற்சி வழங்கவும் வழிவகை செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் விளைவிக்கப்பட்ட அனைத்து விளைப்பொருட்களையும் முறையாக கையாண்டு தரம் பிரித்து சிப்பம் கட்டி விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாய் பெறலாம். இதற்காக அறுவடைக்கு பின் மேலாண்மை இனத்தில் சிப்பமிடும் அறை கட்டுதல், குறைந்த அடக்கமுள்ள வெங்காய சேமிப்பு கூடம் மற்றும் பழங்களை பழுக்க வைக்கும் கூடம் ஆகியவை கட்டவும் உழவர்கள் மட்டத்தில் அவரவர் பண்ணைகளில் நிலவும் குறைகளை நிவரத்தி செய்திடவும் மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. மேலும் நீர் ஆதாரங்களை உருவாக்கி பாலித்தீன் தாள்களை பரப்பி மழைநீர் சேகரிக்கும் குட்டைகள் அமைக்கவும், நவீன தோட்டக்கலை தொழில்நுட்பங்களை உழவர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக மாவட்ட அளவிலான

கருத்தரங்குகள் நடத்திடவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட ரூ.486.303 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய வேளாண் அபிவிருத்தி

### (National Agriculture Development programme)

இத்திட்டத்தின் கீழ் தரமான வாழை உற்பத்தி செய்திட பாலிதின் உறைகளை கொண்டு வாழைத்தார்களை மூடுவதற்காக மானிய உதவியும் வெங்காய பயிர் பரப்பு அதிகரித்தல், பாரம்பரிய பழ வகைகளான மா, ஆரஞ்சு, நாவல் மற்றும் பாரம்பரிய காங்கறி இரகங்கள் பரப்பு விரிவாக்கத்திற்காக மானிய உதவியடன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சுற்றுசூழல் சார்ந்த பூச்சிகள் மேலாண்மை, அறுவடை உபகரணங்கள், கருவிகள், காய்கறி மூலிகை நாற்று தளைகள் ஆகியன மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. நகர்புரங்களில் வசிக்கும் மக்களின் காய்கறி தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் மானிய விலைவில் மாடி தோட்டக்களை வழங்குதல் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட ரூ. 121.645 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மானாவாரி நில மேம்பாடு (Rainfed Area Development)

**தற்போது சாகுபடியில் இல்லாத மானாவாரி தரிசு நிலங்களில் பல்லாண்டு தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க செடிகள் நடவுக்கும் இதர இடுபொருட்கள் விநியோகத்திற்கும் 50 சத மானியமாக எக்டருக்கு ரூ.25000- வரை வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பசுமைக்குடில், நிழல் வலை கூடம் அமைத்தல், விவசாயிகள் பயிற்சி, செயல் விளக்க திடல் அமைத்தல் ஆகியவற்றிற்கும் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட ரூ.139.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## <u>பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம்</u> (Rainfed Area Development)

**பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம் என்பது விவசாயத்துறையில் எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் பயிர் இழப்பு அல்லது சேதம் போன்றவற்றில் இருந்து விவசாயிகளை பாதுகாப்பதன் மூலம் நிலையான உற்பத்திக்கு ஆதரவு அளிப்பதாகும்.**

**உழவர்கள் தாம் சாகுபடி செய்த பயிர்களில் இயற்கை பேரிடர் போன்ற காரணங்களால் ஏற்படும் மகசூல் இழப்பினை ஈடுகட்டும் விதமாக பிரதம மந்திரியின் பயிர்காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகள் சேர்ந்து பயனடையலாம். தற்போது, இத்திட்டத்தில் காப்பீடு அலகாக வருவாய் கிராமம் நிர்ணயக்கப்பட்டுள்ளதால், இயற்கை பேரிடரால் ஏற்படும் சேதங்களை வருவாய் கிராம அளவில் கணக்கிட்டு, நிவாரணம் வழங்க வழிசெய்யப்படுகிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கடன் பெறும் விவசாயிகள் மட்டுமின்றி, கடன் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.**

**தேனி மாவட்டத்தில் காரீப் பருவத்தில்  வாழை, வெங்காயம், கப்பை போன்ற பயிர்களுக்கும், ராபி பருவத்தில் வாழை பயிருக்கும் பயிர் காப்பீடு செய்திட அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.**

## <u>அரசு தோட்டக்கலைப் பண்ணை, பெரியகுளம்</u>

தேனி மாவட்டத்தில் பெரியகுளம் - திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையின் நோக்கமானது, தரமான உண்மைதன்மையுள்ள பல்வேறு இரக பழங்கன்றுகள், காய்கறி நாற்றுகள், அழகு செடிகள், மர வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகம் செய்வதாகும். இங்கு பழங்கன்றுகள், பலவகையான ஒட்டு முறையிலும், பதியன், விண் பதியன் முறைகளிலும் பயிர் பெருக்கம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. வீரிய காய்கறி நாற்றுகள், குழிதட்டு முறையில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு தேவையான பழ ஒட்டுச்செடிகள், பதியன்கள், வீரிய காய்கறி நாற்றுகள், மூலிகை செடிகள் ஆகியவற்றை பெரியகுளம் அரசு தோட்டக்கலை பண்ணையில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.